FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318767

1. District : திருப்பத்தூர் PS: உயர்கல்வி புலனாய்வு காவல்நிலையம் Year: 2026 FIR No.: 4/2026 Date: 06.07.2026
மாவட்டம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act 16 of 2018) Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 01.01.2026 Date to : 03.07.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to : 16.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 06.07.2026 Time : 13.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 06.07.2026 Vol. I Time : 13.00 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் திருப்பத்தூர் நகராட்சி அலுவலகம் சுமார் 2 Km தென் மேற்கு
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு.S. நாகராஜன் (b) Father's/ Husband's Name : K. சிவானந்தம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1970 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : ஆய்வுக்குழு ஆய்வாளர் (g) Address : ஆய்வுக்குழு அலுவலகம் வேலூர், கோவிந்தப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம்
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் (1) திரு.ரா.கோபிநாதன், உதவி வருவாய் அலுவலர், (2) திரு.சு.கதிரவன், (3) திரு.சிவக்குமார், சுமை. மேற்பார்வையாளர், மற்றவைகள் (4) திரு.ம. தேவராஜன், வயது 42, வருவாய் உதவியாளர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வரவில்லை.

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

/

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

06.7.26

06/07/2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

06.07.2026 at 15.00hrs.

Name: பெயர் J. Raju
Rank: நிலை DSP ..... No. எண் .....
VAC, Tirupathur.

F.I.R Contents in Vigilance and Anti-Corruption, Tirupathur Detachment Crime No.4/2026 U/s. 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act 16 of 2018).

பணிந்தனுப்பப்படுகிறது

இன்று (06.07.2026) காலை 13.00 மணிக்கு நான் அலுவலகத்தில் இருந்தபோது, திரு.S.நந்தகுமார், ஆய்வுக் குழு ஆய்வாளர், ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று புகாரில் குறிப்பிட்டிருந்த நபர்கள்மீது திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக குற்ற எண் 4/2026 U/s. 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act 16 of 2018) ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனு விவரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.S.நந்தகுமார், ஆய்வுக் குழு ஆய்வாளர், ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. கைப்பேசி எண்-9488646949 பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பத்தூர் மாவட்டம். ஐயா, நான் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கான ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.07.2026ஆம் தேதி நான் பணியில் இருந்தபோது, திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளருக்கு கிடைக்கப்பெற்ற நம்பகமான இரகசிய தகவலின்படி, திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் சொத்து வரி மற்றும் இதர வரிகள் நிர்ணயிப்பதில் முறைகேடுகள் செய்து, பொதுமக்களிடமிருந்து சட்டவிரோதமாக பணம் வசூலித்து, அப்பணத்தை பில்கலெக்டர்களான திரு.சிவக்குமார் மற்றும் திரு.கோடீஸ்வரன் ஆகியோர் மூலம் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் சில அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதாக கிடைத்த ரகசிய தகவலினை எனக்கு தெரிவித்ததன் அடிப்படையில் திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்தேன். பின்னர் 03.07.2026 அன்று மாலை சுமார் 04.00 மணியளவில், திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.ஜெ.ராஜ் மற்றும் காவல் குழுவினருடன் திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்திற்கு சென்று திருப்பத்தூர் நகராட்சி ஆணையாளர் திருமதி.எஸ்.சாந்தி அவர்களிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு திடீர் சோதனை குறித்து தெரிவிக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து நகராட்சி ஆணையாளரின் அறை, நகரமைப்பு ஆய்வாளர் அறை, தெருவிளக்கு பராமரிப்பு பிரிவு, இ-1 மற்றும் இ-2 இளநிலை உதவியாளர் அறை, இளநிலை பொறியாளர் அறை மற்றும் பொறியாளர் அறை ஆகியவற்றில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், எப்-1 எழுத்தர் அறை, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பிரிவு அறை மற்றும் நகராட்சி தலைவர் அறை ஆகியவை பூட்டப்பட்டிருந்தது. பின்னர் நகராட்சி ஆணையாளர் பயன்படுத்தி வந்த அரசு வாகனமும் சோதனை செய்யப்பட்டது. அப்போது அங்கு சந்தேகப்படும்படியான பணமோ பொருளோ எதுவும் இல்லை. நகராட்சி அலுவலகத்தின் பில் கவுண்டரில் வரி வசூல் பணி நடைபெற்று வந்தது. அங்கு பணியிலிருந்த வருவாய்

உதவியாளர் திரு.சரவணனிடம் விசாரணை மேற்கொண்டதில், குடிநீர் வரி, சொத்து வரி மற்றும் இதர நகராட்சி வரிகள் வசூலிக்கப்படுவதாகவும், 02.07.2026 அன்று வசூலிக்கப்பட்ட ரூ.8,31,864/- தொகை வங்கியில் செலுத்துவதற்காக இருப்பில் வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார். அத்தொகை சரிபார்க்கப்பட்டு, பின்னர் வங்கியில் செலுத்துவதற்காக அவரை பணத்துடன் அனுப்பி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, நகராட்சி அலுவலகத்தின் சுகாதாரப் பிரிவு மற்றும் சுகாதார ஆய்வாளர் அலுவலகங்களில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அங்கு சந்தேகப்படும்படியான பணமோ பொருளோ எதுவும் இல்லை. அதனைத் தொடர்ந்து, திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரிடமும் தனித்தனியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அவர்களிடம் இருந்த பணம் குறித்து சரிபார்க்கப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் இருந்த, தங்களது கைபேசியில் சந்தேகத்திற்கிடமான வங்கி பணபரிவர்த்தனை மேற்கொண்டிருந்த அலுவலர்களின் பரிவர்த்தனை விவரங்கள் பார்வையிட்டு விசாரிக்கப்பட்டது. (1) திரு.ரா.கார்த்திகேயன், வயது 43, தந்தை பெயர் ராஜேந்திரன், உதவி வருவாய் அலுவலர் (Assistant Revenue Officer) மற்றும் பொறுப்பு நிர்வாக அலுவலர் (In-charge Administrative Officer) என்பவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அவரிடம் ரொக்கப் பணம் எதுவும் இல்லை. அவர் பயன்படுத்தி வந்த கைப்பேசியை அவரது சம்மதத்துடன் பார்வையிட்டபோது, 9486352875 மற்றும் 9344712598 ஆகிய இரண்டு கைப்பேசி எண்கள் பயன்படுத்தி வருவது தெரியவந்தது. மேற்படி கைப்பேசியில் Google Pay மற்றும் PhonePe செயலிகள் இருந்தன. அவற்றுடன் இணைக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்குகள் குறித்து கேட்டறிந்ததில், கனரா வங்கி, தர்மபுரி கிளை, கணக்கு எண் 61242200149986 மற்றும் பாரத ஸ்டேட் வங்கி, திருப்பத்தூர் கிளை, கணக்கு எண் 32327150765 ஆகிய வங்கிக் கணக்குகள் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேற்படி Google Pay மற்றும் PhonePe பரிவர்த்தனை விவரங்களை பார்வையிட்டபோது, 2026 ஆம் ஆண்டில் அவரது வங்கிக் கணக்குகளுக்கு குறிப்பிடத்தக்க அளவில் பண வரவுகள் வந்திருந்தது. குறிப்பாக, திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் பில் கலெக்டராக பணிபுரியும் திரு. சிவக்குமார் (கைப்பேசி எண்: 9344076753 என்பவரிடமிருந்து Google Pay/ PhonePe மூலம் பிப்ரவரி மாதத்தில் ரூ.3,400/-, மார்ச் மாதத்தில் ரூ.23,000/-, ஏப்ரல் மாதத்தில் ரூ.31,000/-, மே மாதத்தில் ரூ.40,600/- மற்றும் ஜூன் மாதத்தில் ரூ.5,600/- என மொத்தம் ரூ.1,03,600/- வரவு பெறப்பட்டிருந்தது. மேலும், வருவாய் ஆய்வாளர் திரு.சதீஷ்குமார் என்பவரிடமிருந்து ஜனவரி மாதத்தில் ரூ.17,000/-, பிப்ரவரி மாதத்தில் ரூ.8,400/-, ஏப்ரல் மாதத்தில் ரூ.1,500/- மற்றும் ஜூன் மாதத்தில் ரூ.20,750/- என மொத்தம் ரூ.47,650/- வரவு பெறப்பட்டிருந்தது. அதேபோல், பில் கலெக்டர் திரு.கோடீஸ்வரன் என்பவரிடமிருந்து ஜனவரி மாதத்தில் ரூ.9,500/-, ஏப்ரல் மாதத்தில் ரூ.4,000/-, மே மாதத்தில் ரூ.6,250/- மற்றும் ஜூன் மாதத்தில் ரூ.650/- என மொத்தம் ரூ.20,400/- வரவு பெறப்பட்டிருந்தது. மேலும், குணசேகரன் என்ற சிவில் ஒப்பந்ததாரரிடமிருந்து (Civil Contractor) ரூ.15,000/- வரவு பெறப்பட்டிருந்தது. மேற்கண்ட நபர்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த பண வரவு ரூ.1,86,650/- ஆக இருந்தது. மேற்படி பண வரவுகள் குறித்து திரு.ரா.கார்த்திகேயனிடம் விளக்கம் கேட்டபோது, தனக்கு மாதச் சம்பளம் சில நேரங்களில் தாமதமாக வருவதால் குடும்பச் செலவுகளுக்காக மேற்கண்ட நபர்களிடம் கடனாகப் பணம் பெற்றதாக

தெரிவித்தார். மேலும், கடன் தொகைகளை பணமாக (Cash) திருப்பிச் செலுத்தி விட்டதாகவும் கூறினார். அவரிடம், கடன் தொகைகள் வங்கிக் கணக்கு வாயிலாக பெறப்பட்ட நிலையில், அவற்றை ஏன் வங்கிப் பரிவர்த்தனை மூலமாகவே திருப்பிச் செலுத்தவில்லை என்று கேட்டபோது, கடன் வாங்கும்போது மட்டும் வங்கிப் பரிவர்த்தனை மூலம் பெற்றதாகவும், திருப்பிச் செலுத்தும்போது கையில் ரொக்கமாக வழங்கிவிட்டதாகவும் விளக்கம் அளித்தார். எனினும், அவரது வங்கிக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணப் பரிவர்த்தனைகள் மற்றும் அவர் அளித்த விளக்கங்கள் ஆகியவற்றை ஒப்பிட்டு பரிசீலித்தபோது, அவர் அளித்த விளக்கம் இயல்பானதாகவும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் தெரியவில்லை. (2) திரு.சா.சதீஷ்குமார், வயது 40, தந்தை பெயர் சண்முகம், வருவாய் ஆய்வாளர் (Revenue Inspector) என்பவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது, அவரிடம் ரொக்கப் பணம் எதுவும் இல்லை. பின்னர், அவர் பயன்படுத்தி வந்த கைப்பேசியை அவரது சம்மதத்துடன் பார்வையிட்டபோது, 9159923201 மற்றும் 9976530316 ஆகிய இரண்டு கைப்பேசி எண்கள் பயன்படுத்தி வருவது தெரியவந்தது. மேற்படி கைப்பேசியில் Google Pay மற்றும் PhonePe செயலிகள் நிறுவப்பட்டிருந்தன. அவற்றுடன் இணைக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்குகள் குறித்து கேட்டறிந்ததில், இந்தியன் வங்கி, வாணியம்பாடி கிளை கணக்கு எண் 6558558525 மற்றும் பாரத ஸ்டேட் வங்கி, வாணியம்பாடி கிளை கணக்கு எண் 35730639752 ஆகிய வங்கிக் கணக்குகளை பயன்படுத்தி வருவதாக தெரிவித்தார். மேற்படி Google Pay, PhonePe பரிவர்த்தனை விவரங்களை பார்வையிட்டபோது, 01.04.2026 முதல் 30.06.2026 வரை அவரது வங்கிக் கணக்குகளில் மொத்தம் ரூ.1,00,540/- பண வரவு பெறப்பட்டிருந்தது தெரியவந்தது. மேற்கண்ட தொகைகளில், திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் பில் கலெக்டர்களாக பணிபுரியும் திரு. சிவக்குமார் என்பவரிடமிருந்து ரூ.16140/- மற்றும் திரு. கோடீஸ்வரன் என்பவரிடமிருந்து ரூ.19400/- மற்றும் அலுவலக உதவியாளர் திரு.மதன் அவர்களிடமிருந்து ரூ.2000/- மற்றும் தூய்மை இந்தியா பரப்புரையாளர் திருமதி.மங்கை என்பவரிடமிருந்து ரூ.2000/- மற்றும் அலுவலக உதவியாளர் திரு.சரவணன் என்பவரிடமிருந்து ரூ.28100/- மற்றும் திரு.கார்த்திகேயன் என்பவரிடமிருந்து ரூ.28900/- மற்றும் மேலும் சில நபர்களிடமிருந்தும் பணப் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது தெரியவந்தது. மேற்படி பண வரவுகள் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, தனக்கு மாதச் சம்பளம் தாமதமாக வருவதால், அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களிடம் குடும்பச் செலவிற்காக கடனாகப் பணம் பெற்றதாக தெரிவித்தார். மேலும், மேற்கண்ட கடன் தொகைகளை வங்கிப் பரிவர்த்தனை மூலம் திருப்பிச் செலுத்தினீர்களா என்று கேட்டபோது, அவற்றை ரொக்கமாக (Cash) கையில் கொடுத்து திருப்பிச் செலுத்தியதாக விளக்கம் அளித்தார். எனினும், அவரது வங்கிப் பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, மேற்கண்ட நபர்களுக்கு அவரது வங்கிக் கணக்கிலிருந்து பணம் செலுத்தப்பட்டதற்கான ஒருசில வங்கிப் பரிவர்த்தனையே காணப்பட்டது. மேலும், அவர் அளித்த விளக்கம், அவரது வங்கிப் பரிவர்த்தனை விவரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் நம்பத்தகுந்ததாகவும் இல்லை. (3) திரு.வி.சிவக்குமார், வயது 50, தந்தை பெயர் வீரபத்திரன், பில் கலெக்டர் (Bill Collector) என்பவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது, அவரிடம் ரொக்கப் பணம் எதுவும் இல்லை. பின்னர், அவர்

பயன்படுத்தி வந்த கைப்பேசியை அவரது சம்மதத்துடன் பார்வையிட்டபோது, 9344076753 என்ற கைப்பேசி எண்ணைப் பயன்படுத்தி வருவது தெரியவந்தது. மேற்படி கைப்பேசியில் Google Pay மற்றும் PhonePe செயலிகள் நிறுவப்பட்டிருந்தன. அவற்றுடன் இணைக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்குகள் குறித்து கேட்டறிந்ததில், கனரா வங்கி, திருப்பத்தூர் கிளை, கணக்கு எண் 0952101034695 மற்றும் மகாராஷ்டிரா வங்கி, ஹவுசிங் போர்டு கிளை, திருப்பத்தூர், கணக்கு எண் 60473863518 ஆகிய வங்கிக் கணக்குகளை பயன்படுத்தி வருவதாக தெரிவித்தார். மேற்படி Google Pay, PhonePe பரிவர்த்தனை விவரங்களை ஆய்வு செய்தபோது, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ.3,89,773/-, மே மாதத்தில் ரூ.3,06,895/- மற்றும் ஜூன் மாதத்தில் ரூ.2,36,815/- என குறிப்பிடத்தக்க அளவில் பணப் பரிவர்த்தனைகள் நடைபெற்றிருந்தது தெரியவந்தது. மேற்படி அதிகளவிலான பணப் பரிவர்த்தனைகள் குறித்து விளக்கம் கேட்டபோது, தனக்கு இரண்டு மகள்கள் இருப்பதாகவும், அவர்கள் வேலைக்குச் செல்வதால் ஏப்ரல் மாதத்தில் ஒருவர் ரூ.29,000/- மற்றொருவர் ரூ.25,000/- அனுப்பியதாகவும், மேலும் மே மற்றும் ஜூன் மாதங்களில் தலா ரூ.28,000/- வீதம் அனுப்பியதாகவும் தெரிவித்தார். மேலும், வரி வசூல் பணிக்காக வெளியில் செல்லும்போது சில பொதுமக்கள் Google Pay மற்றும் PhonePe மூலமாக தமது கைப்பேசிக்கு பணம் அனுப்புவதாகவும், பின்னர் அந்தத் தொகையை நகராட்சி கணக்கில் செலுத்துவதாகவும் விளக்கம் அளித்தார். மேலும் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மட்டும் அவரது வங்கி கணக்கில் பெறப்பட்ட பணத்தில் ரூ.176245/- சந்தேகத்திற்குரிய வகையில் காணப்பட்டது. மேலும் அவரது Google Pay, PhonePe பரிவர்த்தனை விவரங்களை விரிவாக ஆய்வு செய்தபோது, உதவி வருவாய் அலுவலர் திரு.ரா.கார்த்திகேயன் அவர்களுக்கு 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 03.07.2026 வரை மொத்தம் ரூ.1,03,600/- மற்றும் வருவாய் ஆய்வாளர் திரு.சா.சதீஷ்குமார் அவர்களுக்கு கடந்த ஆறு மாதங்களில் மொத்தம் ரூ.33,890/- Google Pay/PhonePe மூலம் அனுப்பியிருப்பது தெரியவந்தது. மேற்படி பணப் பரிவர்த்தனைகள் குறித்து விளக்கம் கேட்டபோது, திரு. கார்த்திகேயன் மற்றும் திரு.சதீஷ்குமார் ஆகியோர் தன்னிடம் குடும்பத் தேவைக்காக கடனாகப் பணம் பெற்றதாக தெரிவித்தார். அவரிடம், கடந்த ஆறு மாதங்களாக இவ்வளவு தொகைகளை கடனாக வழங்கியிருந்தால், அதனை அவர்கள் ஏன் Google Pay, PhonePe அல்லது வங்கிப் பரிவர்த்தனை மூலம் திருப்பி பெறவில்லை என்று கேட்டபோது, அவர்கள் கடன் தொகைகளை ரொக்கமாக (Cash) நேரடியாக தன்னிடம் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள் என்று விளக்கம் அளித்தார். எனினும், அவரது வங்கிப் பரிவர்த்தனைகள் விவரங்களை ஆய்வு செய்தபோது, அவர் அளித்த விளக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் எந்தவித வங்கிப் பரிவர்த்தனையும் காணப்படவில்லை. மேலும், அவர் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இல்லை. (4) திரு.M.கோடீஸ்வரன், வயது 42, தந்தை பெயர் முனிரத்தினம், வருவாய் உதவியாளர் (Revenue Assistant) என்பவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது, அவரிடம் ரொக்கப் பணம் எதுவும் இல்லை. பின்னர், அவர் பயன்படுத்தி வந்த கைப்பேசியை அவரது சம்மதத்துடன் பார்வையிட்டபோது, 9003651899 என்ற கைப்பேசி எண்ணைப் பயன்படுத்தி வருவது தெரியவந்தது. மேற்படி கைப்பேசியில் Google Pay மற்றும் PhonePe செயலிகள் நிறுவப்பட்டிருந்தன. அவற்றுடன் இணைக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்குகள் குறித்து கேட்டறிந்ததில், பாரத ஸ்டேட் வங்கி, திருப்பத்தூர் கிளை, கணக்கு எண் 20178024076

மற்றும் சிட்டி யூனியன் வங்கி, திருப்பத்தூர் கிளை, கணக்கு எண் 500101012137174 ஆகிய வங்கிக் கணக்குகளை பயன்படுத்தி வருவதாக தெரிவித்தார். மேற்படி Google Pay, PhonePe பரிவர்த்தனை விவரங்களை ஆய்வு செய்தபோது, குறிப்பிடத்தக்க அளவில் பணப் பரிவர்த்தனைகள் நடைபெற்றிருந்தது தெரியவந்தது. குறிப்பாக, கடந்த ஆறு மாதங்களில் உதவி வருவாய் அலுவலர் திரு.ரா.கார்த்திகேயன் அவர்களுக்கு மொத்தம் ரூ.33,400/- மற்றும் வருவாய் ஆய்வாளர் திரு.சா.சதீஷ்குமார் அவர்களுக்கு மொத்தம் ரூ.56,400/- என மொத்தம் ரூ.89,800/- Google Pay/PhonePe மூலம் அனுப்பியிருப்பது தெரியவந்தது. மேற்படி பணப் பரிவர்த்தனைகள் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, திரு. ரா.கார்த்திகேயன் மற்றும் திரு. சா. சதீஷ்குமார் ஆகியோர் தன்னிடம் குடும்பத் தேவைக்காக கடனாகப் பணம் பெற்றதாகவும், அக்கடன் தொகைகளை Google Pay, PhonePe அல்லது வங்கிப் பரிவர்த்தனை மூலம் அல்லாமல் ரொக்கமாக (Cash) நேரடியாக திருப்பி தந்ததாகவும் தெரிவித்தார். மேலும், அவரது வங்கிக் கணக்குகளில் அதிகளவில் பண வரவுகள் ஏற்பட்டது குறித்து கேட்டபோது, வரி வசூல் பணிக்காக பொதுமக்களிடம் செல்லும் போது சிலர் Google Pay மற்றும் PhonePe மூலம் தமது கைப்பேசிக்கு பணம் அனுப்புவதாகவும், பின்னர் அந்தத் தொகையை நகராட்சி கணக்கில் உரிய முறையில் செலுத்துவதாகவும் விளக்கம் அளித்தார். எனினும், அவரது Google Pay, PhonePe பரிவர்த்தனை விவரங்களை ஆய்வு செய்தபோது, அவர் அளித்த விளக்கங்களை உறுதிப்படுத்தும் வகையில் போதுமான ஆதாரங்கள் காணப்படவில்லை. அவரது உயரதிகாரிகளுக்கு அவர் வங்கி பரிவர்த்தனை மூலம் கடன் கொடுத்துவிட்டு அதை ரொக்கமாக வாங்கிவிட்டதாக, அவர் அளித்த விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இல்லை. பின்னர் பில் கலெக்டர் திரு. வி.சிவக்குமார் பராமரித்து வந்த Property Tax Assessment List Register (2025-2026) பதிவேடு ஆய்வு செய்யப்பட்டதில், பெரும்பாலான சொத்து வரி மதிப்பீட்டு பதிவுகளில் பெறப்பட வேண்டிய அலுவலர்கள் மற்றும் நகராட்சி ஆணையரின் கையொப்பங்கள் பெறப்படாமல் இருந்தது தெரியவந்தது. இதுகுறித்து கேட்டபோது, ஆள் பற்றாக்குறை மற்றும் பணிச்சுமை காரணமாக கையொப்பங்கள் பெறப்படவில்லை என விளக்கம் அளித்தார். மேற்கண்ட பதிவேடு மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு. வி. சிவக்குமார் பராமரித்து வந்த Property Tax Assessment List Register (2025-2026)-ல் சொத்து வரி மதிப்பீடு தொடர்பான முழுமையான பதிவுகள் இல்லாததால், 27.02.2026 முதல் 03.07.2026 வரை மேற்கொள்ளப்பட்ட சொத்து வரி மதிப்பீட்டு விவரங்களை நகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது. அதன்படி, கணினியில் இருந்து 15 பக்கங்களைக் கொண்ட சொத்து வரி மதிப்பீட்டு விவரங்களின் அச்சுப்பிரதி பெறப்பட்டு, மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, வருவாய் உதவியாளர் திரு. மா.கோடீஸ்வரன் பராமரித்து வந்த 2025-2026 ஆம் ஆண்டுக்கான மாதாந்திர சொத்து வரி மதிப்பீட்டு பதிவேடு ஆய்வு செய்யப்பட்டதில், பெரும்பாலான பதிவுகளில் அதிகாரிகளின் ஒப்புதல் கையொப்பங்கள் பெறப்படாமல் இருந்தது. எனவே, மேற்படி பதிவேடும் மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக, வருவாய் உதவியாளர் திரு. சரவணன் பராமரித்து வந்த Monthly Property Tax Assessment List பதிவேடு ஆய்வு செய்யப்பட்டதில், பதிவேடு முறையாக பராமரிக்கப்படாமலும், சொத்து வரி மதிப்பீட்டு விவரங்கள் முழுமையாக பதிவு செய்யப்படாமலும், பல கணக்கீட்டு தாள்களில் மதிப்பீட்டு தேதி குறிப்பிடப்படாமலும் இருந்தது. எனவே, மேற்படி பதிவேடும் மேல்விசாரணைக்காக

கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக, வருவாய் உதவியாளர் திரு. சரவணன் பராமரித்து வந்த Monthly Property Tax Assessment List பதிவேடு ஆய்வு செய்யப்பட்டதில், பதிவேடு முறையாக பராமரிக்கப்படாமலும், சொத்து வரி மதிப்பீட்டு விவரங்கள் முழுமையாக பதிவு செய்யப்படாமலும், பல கணக்கீட்டு தாள்களில் மதிப்பீட்டு தேதி குறிப்பிடப்படாமலும் இருந்தது தெரியவந்தது. எனவே, அந்த பதிவேடும் மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சந்தேகத்திற்கிடமான வங்கி பணபரிவர்தனைகள் மேற்கொண்டிருந்த உதவி வருவாய் அலுவலர் திரு. ரா.கார்த்திகேயன், வருவாய் ஆய்வாளர் திரு.சதீஷ்குமார் மற்றும் வருவாய் உதவியாளர்கள் திரு. வி.சிவக்குமார், திரு.கோடீஸ்வரன் ஆகியோரிடமிருந்து வங்கி பரிவர்த்தனை தொடர்பான விளக்க கடிதங்கள் தனித்தனியாக பெற்றேன். இருதுறை கூட்டு திடீர் சோதனை 03.07.2026 அன்று மாலை 16.00 மணிக்கு தொடங்கி, 04.07.2026 அன்று அதிகாலை 00.45 மணியளவில் நிறைவடைந்தது. இது சம்மந்தமாக தயார் செய்த மகஜரின் நகல் ஒன்று நகராட்சி ஆணையருக்கு உரிய ஒப்புதலுடன் வழங்கப்பட்டது. மேற்படி இருதுறை கூட்டு திடீர் சோதனையின்போது, திரு.ரா.கார்த்திகேயன், திரு.சா.சதீஷ்குமார், திரு.வி.சிவக்குமார் மற்றும் திரு.மா.கோடீஸ்வரன் ஆகியோரின் வங்கி பணப் பரிவர்த்தனைகள் சந்தேகத்திற்கிடமானதாக இருப்பதும், மேலும் அவர்கள் பராமரித்து வந்த சொத்து வரி மதிப்பீடு தொடர்பான பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்படாமல் உள்ளதால் மேற்படி அலுவலர்கள் சொத்துவரி சம்மந்தமாக பொதுமக்களிடமிருந்து சட்டவிரோதமாக பணம் வசூல் செய்து தங்களுக்குள் பகிர்ந்துகொண்டுள்ளதற்கான நியாயமான முகாந்திரம் இருப்பதாக தெரிகிறது. எனவே, திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், சந்தேகத்திற்கிடமான வங்கிப்பரிவர்த்தனைகள் மேற்கொண்டிருந்த மேற்படி நான்கு அலுவலர்கள் வங்கி பரிவர்த்தனைக்காக தனித்தனியாக கொடுத்த விளக்க கடிதங்கள் மற்றும் திடீர் சோதனை மகஜர் ஆகியவற்றை இத்துடன் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். இது சம்மந்தமாக உரிய சட்டநடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (sd) திரு.S.நந்தகுமார் 06.07.26 Cell Inspector O/o ICO/VLR.9 Sir, Received the complaint on 06.07.2026 at 13.00 hrs and registering a case in Thirupathur V&AC Crime No.4/2026 U/s. 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act 16 of 2018). (Sd) ஜெ.ராஜூ 06/07/2026 DSP, V&AC, Thirupathur.

The original FIR is submitted to the Hon'ble District and Sessions Judge, Tirupathur along with original complaint petition, original Proceedings prepared for Joint Surprise Check conducted on 03.07.2026 and original explanation letters, dated 03.07.2026 for G–pay & Phone Pay transactions, given by Tr.R.Karthikeyan, Tr.S.Sathishkumar, Tr.V.Sivakumar and Tr.M.Koteeswaran, and the copies are sent to the officers concerned.

06/07/2026

Dy. Supdt. of Police
V & A.C., Tirupathur,
Tirupathur Dt.,